# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 கும்பம் (28-2-1989) ஓர் உருபா (இதழ் எண்: 117)


# சிறுசிறு நன்மைகளும் சலுகைகளும் இனத்தை ஈடேற்றிவிட முடியா.

## தமிழினத்திற்கான அடிப்படை உரிமைகளை மீட்பதும், தமிழ்நாடு அரசியல் விடுதலை பெறுவதுமே அனைவர்க்கும் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும்!

## இறுதித் தலைமுறை இது! இவர்கள் பெற வேண்டியன ஆட்சி நன்மைகள் அல்ல! இன, நாட்டு உரிமைகளே!

இம் முயற்சியில் புறக்கணிப்போ தோல்வியோ கண்டால் தமிழினம் இன்னும் ஐநூறு ஆண்டுகளில் உரோமானிய, கிரேக்க இனங்களைப் போல் அழிந்துவிடும்! இஃது உறுதி!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

**மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க**

Scanned with CamScanner

# ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

**மடல்: 7** *மதுரை நடுவண் சிறை.*
15-10-88.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு வணக்கம்.

12-ஆம் பக்கல் சதாசிவம் ஆணையகத்தில் பேசப்பெற்ற கருத்துகளை அம்மா அவர்கள் சொல்லியிருப்பார்கள். இதற்கிடையில் வழக்குத் தொடர்பான நிலையில் நாங்கள் எப்படி அணுகுதல் வேண்டும் எனும் தெளிவு கொள்ளாமல் உள்ளோம். எனவே அதுபற்றியான தெளிவுடைய வழக்கறிஞரைச் சந்தித்துப் பேச எண்ணுகிறோம்.

முன்பு திரு. இராமதாச ஐயா (வழக்கறிஞர்) எங்களை நேர்காணலில் வந்து கண்டு சென்றார்கள். அப்படியல்லாமல் வருகிற வழக்கறிஞர் நேரடியாகச் சிறை அலுவலரிடம் கூறியே வழக்குத் தொடர்பாகப் பேச வேண்டுமென அவர் அறையில் பேசினால் விளக்கமாகவும் விரிவாகவும் பேசலாம் என எண்ணுகிறோம்....

*தமிழ்நிலம்* (இதழ் எண்-110) மிகச் சிறப்புடன் உள்ளது. படிப்பாளிகளைப் பெருக்கிக் கொண்டுள்ளோம். விரும்பிப் படிக்கின்றனர்.

*கீதா உதயக்குமார்* — எழுதிய கட்டுரை மிக வரையறுத்த தெளிவுடையதாக மிகச் சிறப்புடன் இருந்தது. இடையிடையே ஆசிரியர் குறிப்பு — அதற்கு அணி சேர்த்துப் பலரைச் சிந்திக்கத் தூண்டியிருக்கும். தென்மொழியின் ஆசிரியவுரையும் மிகச் சிறப்புடன் அமைந்துள்ளது.

தமிழினம் தன் அடிமை நிலையுணர்ந்து, தன் உரிமைக்காகப் போராட வேண்டிய காலம் மிகு தொலைவில் இல்லை. அது தமிழினத்தை நோக்கி நெருங்கி வந்து கொண்டே உள்ளது. போலி ஆரவாரச் சூழல்களில் தம் நிலை இழந்து மூங்கிப் போகின்ற இளைஞர்கள் கூட்டம் மட்டுமன்று, தமிழகம் பெற்றிருப்பது. இத் தமிழினத்தின் அடிமைத் தளை நீக்கி உரிமை பெற்ற ஒரு தமிழகத்தைப் படைக்க வேண்டுமெனவும், அதற்காக அமைந்திருத்தல் கூடாதெனவும் எண்ணுகிற ஏராளமான இளைஞர்களைக் கொண்டதாகவும் தமிழினம் விரிவடைந்து கொண்டுள்ளது.

"எனக்குத் தெரியும் இந்தத் தமிழன்
என்றைக்கும் உருப்பட மாட்டான் என்பது"

— என்கிற நிலையிலிருந்து, இன்றைக்கே எழுந்து போராடுகிற வல்லுணர்வைத் தம் நெஞ்சில் குவித்துக் கொண்டுள்ள இளைஞர் வட்டம் விரிவாகிக் கொண்டே உள்ளது. தமிழன் அடிமையல்லன். அவன் விடுதலைக்காகப் போராடுகிற ஒரு சிறை அரிமாவென அலைந்து கொண்டிருக்கிறான். அவன் விடுதலை இதோ எம் கண்களில் தெரிந்து கொண்டிருக்கிறது. போலி 'விடுதலை'களும் 'முரசொலி'களும், 'மக்கள்குரல்'களும், 'போர்வாள்'களும் பெட்டிகளாய் அடங்குகின்றன. 'ஈட்டியால் செந்தமிழர் இறுதியுரை தீட்டப்' புறப்படுகின்றனர். விடுதலை... விடுதலை... விடுதலை.. அவ் வீர முழக்கங்கள் வானில் எதிரொலிக்கின்றன.

அம்மா! 12-ஆம் பக்கல் பகல் அங்கிருந்து கிளம்பிப் பகல் உணவைத் தேனும்பேட்டையில் ஒரு விடுதியில் சிறப்புடன் உண்டோம். எங்களுடன் வந்த ஒருவர், அனைவரும் அதைத்தான் உண்ணவேண்டுமென வலியுறுத்திச் சிறப்புணவு அளித்தார். பின் இரவு 8 மணி அளவில் உளுந்தூர்ப் பேட்டையில் நம் பொட்டலங்களைப் பிரித்து உண்டோம். மிக அருமையாக இருந்தது. தேங்காய்ச் சோறுதான் சிறிது நச நச என்று இருந்ததே அன்றிக் கெடவில்லை. சுவையுடன் அனைவரும் உண்டுவிட்டு, மறுநாள் விடியல் 4½ மணிக்கு மதுரை வந்து சேர்ந்தோம். இங்கு மிகவும் நலமுடன் உள்ளோம். நீங்கள்தாம் இளைப்பாக இருந்தீர்கள். பிறை தாழ்வில்லை. மற்றபடி அனைவரும் நன்றாக இருந்தனர். அண்ணன் சோர்வாகக் காணப்பட்டது. 'டிபி' (செந்தாழை மகனுக்குப் பொழில் தந்த செல்லப் பெயர்.)—என்னிடம் வரவே சிணுங்கிக் கொண்டது. அக்கா ஏன் வரவில்லை? அக்காவைக் காணாதது வருத்தமாக இருந்தது. நீங்கள் ஏன் வருத்தமாக உள்ளீர்கள்? எங்களைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ள வேண்டாம். எங்கள் உடல்கள்தாம் சுற்றுச் சுவர்களுக்குள் அடைக்கப்பட்டுள்ளனவே தவிர, எங்களின் அறிவும், உணர்வும், 'ஊற்றுப்' பெருக்கெடுத்து இவ் விண்வெளியில் உலாவந்து கொண்டுள்ளன. உங்களையெல்லாம் கண்டு பேசுகின்றன. எங்களுக்கெனவோ, சிறையில் இருப்பதாகவே இம்மியளவு கூட எண்ணமில்லை. ஒரே ஒரு வருத்தம். எங்களின் உடல் உழைப்பைக் கொடுத்துச் செயல்பட இயலவில்லை என்பது தவிர பிற இல்லை. எனவே, நீங்கள் ஏதோ சிறையில் உள்ளோம என்றோ, எங்களை அடக்கி வைத்துள்ளனர் என்றோ எண்ண வேண்டாம. அப்படி அல்ல எங்கள் உணர்வுகள்!... எங்களைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். பிறகு மடல் எழுதுகிறேன்.

அன்புடன்
**பொழிலன்.**

**மடல் 8, 9.** 14-9-88, 17-9-88.
*மதுரை, சிறைச்சாலை.*

அன்புள்ள அம்மா!

தங்களின் மடல்கள் காலத்தே எனக்குக் கிடைத்துக் கொண்டுள்ளன. அப்பா அவர்கள்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முதல பக்கத் தொடர்ச்சி)

நாம் விரும்பியது போல், தமிழின நலம் கருதும் கலைஞர் ஆட்சி — திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி — தமிழகத்தில் அமைந்து விட்டது. இந்த ஆட்சி மாற்றமே நமக்கு மகிழ்ச்சி தருவதன்று. மேலும் நாம் மகிழுவதென்பதே இல்லை; நம் இன நல நோக்கம் நிறைவேறும் என்று நம்பிக்கை தோன்றும் வரை நமக்கு எத்தகைய செயல்களும் மகிழ்வூட்ட முடியாது, 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது' — என்னும் திருவள்ளுவக் கொள்கையுடையவர்கள் நாம்! எனவே, இவர்களின் ஆட்சிப் பேறு தற்காலிகமான ஒரு வல்லாளுமைத் தடுப்பு என்றே நாம் கருத முடியும். மள மளவென்று பொங்கிப் பாயும் வடவாரிய ஆற்று வெள்ளத்தை அணைகட்டித் தடுக்கும் ஆற்றலாகவே கலைஞரையும், தி.மு.க.வையும் நாம் கருதுகிறோம். மற்றபடி இவர்களின் ஆட்சியமைப்பே தமிழினத்திற்கான முழு விளைவையும் — விடிவையும் ஏற்படுத்தித் தரும் என்று நாம் எதிர்பார்த்து விட அன்று, நம்பி விடவும் முடியாது. அவ்வாறு நாம் நம்பிவிடும் அளவிற்கு இவர்களும் இதுவரையும — ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த போதும் கூட — தமிழின விடுவிப்புக்கான எந்த முயற்சியும் செய்துவிடவில்லை — என்பதை நாம் உணர்வோம். முதலில், இவர்களிடம் அன்று, பெரியாரிடம் இருந்த திராவிட உணர்வையே நாம் ஏற்றக் கொள்ளவில்லை. அதுவும் இப்பொழுதுள்ள அரசியல் அமைப்பிலும், ஏற்கனவே சிதைந்து கிடக்கும் தமிழின வரலாற்று நிலையிலும், இந்நிலை ஒருவாறு போற்றிக் கொள்ளக் கூடியதாக இருப்பதால், நாம் இவர்களின் வரவை, வேறு யாரையும் விட, வரவேற்கவும், வாழ்த்தவும் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நின்றுஞ் சொன்னால் வேறு யாரும் நாம் இவர்களை வரவேற்பது போல் — அந்த நோக்கத்திற்காக — அந்த நோக்கத்தின் இன்றியமையாமையை அவர்கள் அறியாததால் — இவர்களை வரவேற்கவும் இல்லை.

இந்நிலையில், இவர்கள் ஆட்சிக் கட்டிலேறி, மக்களியல் நிலையில், அல்லது ஆட்சியியல் நிலையில், ஏதோ சிறு சிறு தீமைத் தவிர்ப்புகளும், நன்மை விளைப்புகளும், அல்லது ஒரு சில சலுகைகளும் செய்து விடுவதாலேயே இவ் வேதுங்கெட்ட தமிழினத்தை ஈடேற்றி விடமுடியாது.

நம்மைப் பொறுத்தவரை, தமிழினத்திற்கான அடிப்படை உரிமைகளை மீட்பதும், தமிழ்நாட்டு விடுதலை பெறுவதுமே நம் அனைவர்க்கும் உண்டான ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம். மற்றபடி சிறு சிறு ஆக்க நிலைகளெல்லாம் நம்மை மகிழ்வித்து விடவும் முடியா; நிறைவு செய்து விடவும் முடியா. இவர்களெல்லாரும் இவ்வாறின்றித், தங்கள் தங்கள் பதவிப் பேறுகளையும், இன்ப ஆக்கங்களையுமே பெரியனவாகக் கருதி மகிழ்ச்சியுறுகின்றார்களென்றால், இவர்கள் நம் இனத்திற்கான — நம் மொழிக்கான ஒட்டு மொத்தமான விடுவிப்பு எது என்பதையே, வரலாற்று, இனவியல், மொழியியல் அடிப்படையில் அறியாமலிருக்கின்றார்கள் என்றுதான் நாம் கருத வேண்டியிருக்கிறது. எனவே, நம்மைப் போன்ற ஆழமான நெஞ்ச வருத்தம் இவர்களுக்கு இருக்க முடியாது.

*'நன்றறி வாரில் கயவர் திருவுடையர்; நெஞ்சத்(து) அவலம் இலர்'* — என்னும் திருக்குறள் மொழியை நாம் மறந்தாலும் நம் நெஞ்ச அவலம் நமக்கு என்றும் எப்பொழுதும் எந்நிலையிலும் அதை நினைவூட்டிக் கொண்டேயிருக்கின்றது. நாம் எந்த நிலையில் ஆக்கம் பெற்றாலும், நம் இனம் வலிவு பெற்று, அஃதிழந்த நலன்களைப் பெறும் வரையில், அத்தகைய ஆக்கங்கள் தலைமாறி அழிந்து போய்க் கொண்டேதாம் இருக்கும் என்பதை நம் இன வரலாறு கூறுகிறது. **'மன நலம் நன்குடைய ராயினும், சான்றோர்க்கு இன நலம் ஏமாப்பு உடைத்து'** என்னும் பொய்யா மொழியை ஓர்க!

நம் முன்னேற்ற முயற்சிகளுக்கான இறுதித் தலைமுறை இது; இறுதி நூற்றாண்டும் இதுதான். எனவே, நாம் இப்பொழுதைக்குப் பெற வேண்டுவன ஆட்சி நன்மைகள் அல்ல; இன, நாட்டு உரிமைகள் மீட்பே! கலைஞரும் அவரின் தோழர்களும் மிகத் துணிவாகவும் அதே பொழுது மிகவும் எச்சரிக்கையாகவும் — **'தூண்டில் காரனுக்கு மிதப்பு மேல் கண்'** என்றவாறு — நம் தலையாய குறிக்கோள் மேல் எப்பொழுதும் கண் வைத்து, காது வைத்து, மனம் வைத்துச் செயலாற்ற வேண்டும்.

**'தூக்கத்தில் உளறினும் தூய்தமிழ் உளறும் என் வாய்'** — என்பார் **பாவேந்தர்**. அவ்வாறான முறையில் **"தூக்கத்தில் உளறினும் இன நலமே உளறுமாறு"** — இவர்களின் உணர்வு, அறிவு, செயல் அனைத்தும் — கொண்ட குறிக்கோளில் — அல்லது — கொள்ள வேண்டிய குறிக்கோளில் — நாட்டத்தோடு இயங்குதல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இம் முயற்சியில் எந்த ஒரு சிறு புறக்கணிப்போ, தோல்வியோ கண்டாலும் தமிழினம் இன்னும் ஐநூறு ஆண்டுகளில், முன்னைய வரலாற்றுச் சிறப்புடைய உரோமானிய, கிரேக்க இனங்களைப் போல் அழிந்துவிடும் என்பது அழிக்க முடியாத உறுதி, உறுதி! எண்ணிப் பாருங்கள்! ○

Scanned with CamScanner

# கருநாடகத்தில் உள்ள தமிழர்கள் தயங்காமல் தம் பிள்ளைகளைத் தமிழ் வகுப்பில் சேர்க்கலாம்!

## கருநாடக உயர்நெறி மன்றத் தீர்ப்பையொட்டி வேண்டுகோள்!

தொடக்க மற்றும் இரண்டாம் நிலைப் (செகண்டரி) பள்ளிகளில் கன்னட மொழியைக் கட்டாயமாகப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற அரசின் உத்தரவைத் தள்ளுபடி செய்து உயர்நெறி மன்றம் அண்மையில் பிறப்பித்த உத்தரவைக் கருநாடக மாநிலத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கழகம் வரவேற்றுள்ளது.

உயர்நெறிமன்றத் தீர்ப்பை உருது இன மக்கள் மனமுழுமையாக மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். அரசியல் அமைப்பியலின் உயர் நெறிகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன என்று அந்தக் கழகத்தின் துணைத் தலைவர் முகமது அப்துல் அலீம் அல் அமீன் செய்தித்தாளுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அனைத்து இந்திய உருது ஆசிரியர்கள் மாநாடும் தீர்ப்பை வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக, கருநாடகத் தமிழர் பேரவைத் தலைவர். மகிபை பாவிசைக்கோ விடுத்த அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

கடந்த 82-ஆம் ஆண்டு குண்டுராவ் அரசு பிறப்பித்த "கட்டாயக் கன்னட" ஆணை செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

காலங்கடந்த தீர்ப்பு இ'து என்றாலும் கூட மொழிச் சிறுபான்மையோர் போராட்ட முன்னணி என்ற பெயரில் ஒன்றுபட்டுப் போராடிய இளைஞர்கள் அனைவருக்கும் கிடைத்த வெற்றி இது.

தங்கவயலில் மோகன், பால்ராசு, உதயகுமார் போன்ற இளைஞர்களும், சித்திரதுர்காவில் இசுலாமிய இளைஞர் சிலரும் செய்த உயிர்த்தியாகங்களும், அடக்கு முறைக்கு அஞ்சாமல் போராட்ட முன்னணியில் இணைந்து அடுக்கடுக்காகப் போராடிய வீரர்களின் உறுதியும் வீண் போகவில்லை.

அதே நேரத்தில் இந்த ஏழாண்டுக்கால இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு, பல பள்ளிக்கூடங்களில் தமிழ் வகுப்புகளை அறவே நீக்கி விட்டது கருநாடக அரசு.

கன்னடத்தை முதல் மொழியாக எடுத்தால் மட்டும்தான் பள்ளியில் இடம் கிடைக்கும் என்று வற்புறுத்தப் பட்டதாலும், கன்னடத்தில் படித்தால் தான் எதிர்காலத்தில் வேலை கிடைக்கும் என்று தமிழ்ப் பெற்றோர்களே கருதியதாலும் பெரும்பாலான தமிழ்க் குழந்தைகள் இப்போது தாய்மொழியாகிய தமிழைப் படிப்பதில்லை. அடுத்த கல்வியாண்டிலாவது தமிழ்ப் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளைத் தமிழ் வகுப்புகளில் சேர்க்க முன் வந்தால் மட்டுமே இந்தத் தீர்ப்புக்குப் பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் மாணவர்களே இல்லை என்று காரணம் காட்டி அறவே தமிழ் வகுப்புகளை நீக்கி விட இந்த அரசு முனையும்.

எனவே தாய்மொழிக் கல்வியின் அருமை பெருமைகளைத் தமிழ்ப் பெற்றோர்களுக்கு எடுத்துரைக்க ஓர் இயக்கம் நடத்த முன் வருமாறு கோகா சட்டத்தை எதிர்த்துப் போராடிய அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

(குண்டுராவ் அரசு பிறப்பித்த ஆணை (G.O. No. ED 113 SOH 79 Dated 20-7-82) இந்திய அரசியல் சட்டத்தின் 29(1), 29(2)30, மற்றும் 350 ஏ, 350-பி ஆகிய பிரிவுகளுக்கு எதிரானது.) 0

---

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'இந்திய அரசியல் சட்டத்தைத் தாளில்தானே எழுதிக் கொளுத்தினோம்'

— என்றெல்லாம் சொல்லிப் பின் இப்போது இந்தியத் 'தேசிய முன்னணி'யில் சேர்ந்த பின்,

'கடலில் போகிற ஓடம் போன்றது தி. மு. க. தேசிய முன்னணியில் உள்ளது. அது கடலில் கலந்து விடாது. கரைக்கு வந்து செல்வது' என்றும் தி.மு.க. தன் தனித் தன்மையை இழந்து விடாது' — என்றும் படிப்படியாக இந்த இந்தியத் துணை வல்லரசிய அமைப்புக்கு வால் பிடித்துக் கொண்டு, ஒவ்வொரு தன்மையாக இழந்து விட்ட பிறகு எந்தத் தனித் தன்மையை இன்னும் சொல்லிக் கொண்டுள்ளது என்று தெரியவில்லை.

இது நிற்க, ஆனால், தேர்தலிலும் ஈடுபடாமல், தமிழ்நாட்டு விடுதலையைப் பற்றியும் எப்பொழுதாவது மேடையில் உணர்வு பொங்க முழங்கிவிட்டுத் தம் கட்சியில் உள்ள இளைஞர்களையும், 'தமிழ்நாடு விடுதலை' — அடைய வேண்டுமென — அங்கிருந்து திருக்கிற உணர்வாளர்களையும் காயடித்துக் கொண்டிருக்கிறது — இன்றைக்குப் பெரியாருக்குப் பின்னால் உள்ள திராவிடர் கழகம்.

இட ஒதுக்கீடு — என்பது பரந்துள்ள இந்தியாவில் உள்ள மக்கள் அனைவர்க்கும் பொருந்துகிற ஒரு சிக்கல்.

கடவுள் மறுப்பு — என்பது உலகம் முழுமையும் பரந்துள்ள அனைத்து மக்களினத்திலும் உள்ள மூட நம்பிக்கைக்கு எதிரான ஒரு கருத்து.

— இவற்றை முகாமைப் படுத்துகிறது திராவிட கழகம்.

(தொடரும்.)

Scanned with CamScanner

## சென்ற இதழ் ஆசிரியவுரைத் தொடர்ச்சி:

எனவே, கலைஞர், மலடி பெற்ற பிள்ளையைப் போல,இடையில் வீணே கழிந்த பதின்மூன்றாண்டு-களுக்குப் பின்னர் கிடைத்த தி.மு.க வின் வெற்றிக் களிப்பில் மிதந்து விடக் கூடாது. எதிரிகள் மிக மிக வலிவானவர்கள். அதனால் மிகவும் எச்சரிக்கை யாக, மிக மிக எச்சரிக்கையாக, கயிற்றின் மேல் நடப்பதைப் போல், கத்திமுனையின் மேல் நிற்ப-தைப் போல் — எந்தநேரத்திலும்,எந்த நிலையிலும் தமக்கும் தம் ஆட்சிக்கும் விழ்ச்சியுண்டு என்பதை மனத்தில் ஆழப் பதித்துக்கொண்டு — செயல்-பட வேண்டும்!

முன்னர் செய்யத் தவறியவற்றை எண்ணிப் பார்த்து நினைவில் வைத்துக்கொண்டும், முன் செய்த தவறுகளைத் தாமும் செய்யாததோடு அமை-யாமல், தம்மைச் சார்ந்தவர்களையும் செய்ய விடா-மல் தடுத்தாண்டு கொள்ளுதல் மிக மிக இன்றியமை யாதது.

கிடைத்துள்ள வாய்ப்பு அரிது; பின்னரும் இப் படியொரு வாய்ப்புக் கிடைக்கும் என்பதற்கும் உறுதியில்லை. ஏனவே காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்பதைத் தந்நலத்திற்காகப் பொருள் கொண்டு விடாமல், நம் அருந்தாய்மொழித் தமிழ்க்கும், தமிழ் இனத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் நிலையான முன்னேற்றத்திற்கு அடிப்படையான வற்றைச் செய்து கொள்ள வேண்டும்.

செய்யப்பெறும் செயல்கள் நாம் செய்தவை என்று எண்ணிப் பெருமிதம் கொண்டு விடாமல், தலை கனத்துப் போகாமல், நம்மைக் கொண்டு செய்விக்கப் பெற்ற செயல்கள் என்று அமைந்து எண்ணி அடங்கி மகிழ்தல் வேண்டும் என்பதை அவர்க்கு அன்புடன் சொல்லிக் கொள்கிறோம். **'அமைந்தாங் கொழுகான், அளவறியான், தன்னை வியந்தான் விரைந்து கெடும்'** எனும் தமிழ் முனிவர் கூற்றை நினைந்து, **'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம் கருமமே கட்டளைக் கல்'** என்பதனையும், 'பெருமை பெருமிதம் இன்மை' என்பதையும் எண்ணிப் போற்றுவன ஆற்றித் தூற்றுவன தவிர்த்துச் செயல்பட வேண்டும் என்-றும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆரவார, ஆர்ப்பாட்ட, விளம்பர நிகழ்ச்சிகளை அறவே தவிர்த்து விடல் வேண்டும். ஆயிரம் மாலை களைப் போட்டுக் கொண்டாலும் ஒன்றுதான். ஒரே யொரு மாலையை அணிந்து கொண்டாலும் ஒன்று தான்! மாலை கழுத்தை அழகு செய்யும் அதே பொழுது, பலருடைய கருத்துக்கும் ஊறு செய்-கிறது என்பதை மறந்து விட வேண்டாம். மாலை-கள் நம்மைத்தான் மயக்கும். மக்களை மயக்காது! அத்தோற்றங்களைப் பார்த்து நன்மக்கள் வெறுப்-படையவே செய்வர் என்பதற்கு, இராசீவின் ஆர வாரங்களும், இந்திரா கட்சி, செயலலிதா கட்சி ஆகியவற்றின் தோல்விகளுமே சான்றுகள்!

தேர்தல் தொடக்கத்திலேயே, தி. மு. க. வின் நடைமுறைகளில் சில கோளாறுகள் இருந்தன-வாகச் செய்திகள் வந்தன; இன்னும் வருகின்றன. அவை அனைத்துக் கட்சிக்கும் பொதுவாகக் கூட இருக்கலாம், ஆனால், பிற வற்றின் துணிந்த கேடு-களை நாம் பின்பற்றும் எடுத்துக் காட்டுகளாகக் கருதிக் கொள்ளக் கூடாது. அவர்களுக்கு நம் நோக்கங்களை முடிந்தால் முறியடிப்பதும், முடியா விட்டால் திசை திருப்புவதுமே கொள்கை! ஆனால், நமக்கு? நம் இழிவுகளையும் அடிமைத்தனங்களையும் அறியாமைகளையும் போக்கி இனத்தை மீட்டாக வேண்டுமே! அப் பெரும் பொறுப்புகளை நாமோ அல்லது நம்மைச் சார்ந்த பிறரோ செய்து முடிக்-கின்ற வரையில்,நாம் மிகப் பொறுப்பாகவும்,அமை வாகவும், எச்சரிக்கையாகவுமாகத்தான் செயல்பட் டாக வேண்டும். வெறுங்கையன் வீசி நடக்கலாம்; விறகுத்தலையன் வீசி நடக்க முடியுமோ?

மக்கள் முன்போல் இல்லை. ஓரளவு அரசியல் உணர்வு வளர்ந்திருக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன்னிருந்த நிலை வேறு; இன்றைய நிலைவேறு. மக்களின் பெரும்பாலார் சிந்திக்கத் தலைப்பட்டுள்ள தாகக் கருத முடிகிறது. இது ஒரு மக்களினம் தன்னுணர்வு பெறுவதற்கு முந்தைய நிலை. அதன் பின்தான் அவர்கள் தன்னறிவு பெற்றுத் தன்னு-ரிமையைச் சிந்திக்க முடியும்.

எனவே, விளம்பரத்தனமாகவும், ஊதியத் தனமாகவும்,ஆரவாரத்தனமாகவும், மக்களை ஏமாற் றும் நோக்கத்துடனும் சிந்திக்கும் நிலைகளைத் தவிர்த்து, மக்கள் நலத்திற்குகந்த ஆக்கமான சிந்-தனைகளும் செயல்களுமே தேவை.

தி. மு. க. வின் முன்னைப் படுதோல்விக்கும், கடந்த 13 ஆண்டுகளாக மூலையில் முடங்கிக் கிடந்த இழிநிலைக்கும்,மக்கள் வெறுப்புக்கும், அவர் கள் பகையை நம்பிக் கிடந்த போக்குக்கும் அடிப்-படைக் காரணமாக இருந்த கையூட்டு, ஏமாற்று, ஆகிய தாழ்ச்சித் தனங்களை அடியோடு கைவிட்டு விட்டு, நம் ஒட்டு மொத்தமான தமிழினத்தின் தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அடிப்படை வரலாற்றுக் காரணங்களாக உள்ளவற்றில் முழுக் கவனமும் கருத்தும் செலுத்தி, அவற்றினின்றும் மக்களை மீட் டெடுக்கும் முழு முயற்சியில் கலைஞர் தம்மை முழு வதுமாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று அவரை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

கலைஞர் வெற்றி பெற்றபின், முதன்முதல் தொலைக்காட்சியில் பேசும் பொழுது, "எங்கள் அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவு செய்கிற பொறுப்-பான அரசாக இருக்கும். மக்களின் நம்பிக்கையைப்

பெறுவதற்கும், பெற்ற நம்பிக்கையை மேலும் பெருக்கிக் கொள்வதற்கும், எங்கள் சிந்தனையையும் செயலையும் பயன்படுத்துவோம்'' என்றும், பின்னர் கடற்கரையில் நடந்த நன்றியறிவிப்புக் கூட்டத்தில், ''தில்லிக்குக் காவடி தூக்காத ஆட்சி, தில்லியின் காலில் விழாத ஆட்சி, உறவுக்குக் கை கொடுத்து உரிமைக்குக் குரல் கொடுக்கும் ஆட்சி'' — என்றும் பேசியுள்ளார். அவ்வாறு பேசினால் மட்டும் போதாது. நடந்து காட்டவும் வேண்டுமன்றோ?

தி. மு. க. கூறிய தேர்தல் உறுதிமொழிகள் கவர்ச்சியானவை, ஏழை மக்களையும், உழவர்களையும், தொழிலாளர்களையும் பெருத்த நம்பிக்கை கொள்ளச் செய்தவை அவை என்று சொன்னாலும் மிகையாகாது. அவற்றை மறவாது அவ்வப்பொழுது நினைவூட்டிக் கொண்டு, வேறு காரணங்களைக் காட்டி அவற்றைத் தவிர்த்து விடாமல் செயற்படுத்திக் காட்டிப் பெருமை பெறவேண்டும், கலைஞர் அரசு!

இவையல்லாமல், கலைஞர் தமிழ்மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் செய்யவேண்டிய, வேறெவரும் செய்ய முடியாத — செய்ய விரும்பாத தனிநிலைச் செயற்பாடுகள் பலவுள. அவை அவ்வப்பொழுது நினைவூட்டப்பெறும். இற்றைய நிலையில் அவர் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டுவனவாக ஒருசிலவற்றை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம். அவை வருமாறு:

## 1. தமிழ்மொழிக்குச் செய்ய வேண்டியவை:

1. ஆட்சி மொழி தமிழ் என்னும் நிலையில் இன்னும் அது முழு அரசுச் செயற்பாட்டுக்கு உரிய வகையில் இல்லாமல் இருந்து வருகிறது. அதை நிறைவு செய்வதை முதற் கடமையாகக் கொள்ள வேண்டும்.

அரசின் எல்லாவகை நடவடிக்கைகளும், நடைமுறைகளும் தமிழிலேயே இயங்குதல் வேண்டும். இதற்கென முதற்கட்டமாக, கூடியவரையில் தூய தமிழையே-கடைப்பிடிக்க வேண்டும். தென்மொழியின் முன்னாள் துணையாசிரியர் பேரா.தமிழ்க்குடிமகன் போன்றவர்கள் கலைஞர் அருகிலிருப்பதைப் பயன்படுத்திக் கொள்ளுதல் நல்லது. ஆனால், ஆளுநர் உரையையொட்டிய உறுப்பினர் சிலரின் கருத்துரைகளுக்கு விடைகொடுத்த வகையில், அவைத் தலைவர் தூய தமிழைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. ''தமிழ்க்குடி மகனால் பேரவையில் இனி தென்மொழி கமழும்; மணக்கும்'' — —என்றெல்லாம் கலைஞர் அவைத்தலைவர் அமர்த்த உரையில் குறிப்பிட்டதை அவர் மெய்ப்பிக்க வேண்டும்.

2. ஆட்சித்துறை, அறத்துறை, கல்வித்துறை முதலிய அனைத்திலும் தமிழே ஆட்சி செய்தல் வேண்டும். இல்லெனில் இது திரவிட ஆட்சியாக இருக்கலாம்; ஆனால் தமிழாட்சியாக ஆகிவிட முடியாது.

3. ஆங்கில, மழலைப் பள்ளிகள் என்றிராமல், வெறும் '*மழலையர் பள்ளிகள்*' என்று மட்டும் இருக்கும்படி செய்து, தமிழையும் ஆங்கிலத்தையும் கட்டாயமாகப் பயிலும்படி செய்தல் வேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களையும் தமிழிலேயே கற்க ஆவன செய்தல் வேண்டும். அவ்வாறு தமிழில் கற்பவர்களுக்குப் பணியமர்த்தத்தில் முன்னுரிமை தர வேண்டும்

4. விளம்பரப் பலகைகள் தமிழ்ப்படுத்தத்தை முழுமையாகச் செயல் படுத்த வேண்டும், இப்பொழுதுள்ள நிலையில் அந்நோக்கம் 5 விழுக்காடு கூட நிறைவேற்றம் பெறவில்லை.

5. வானொலி, தொலைக்காட்சிகளின் பகுதி நேர ஆளுமை மாநில அரசுக்கு ஒதுக்கிக் கொடுக்க தில்லியைக் கட்டாயப் படுத்த வேண்டும். வானொலியிலும் தொலைக்காட்சிகளிலும் நல்ல தமிழாகிலும் பயன்படுத்த வலியுறுத்த வேண்டும். அத்துறைகளில் தமிழ்க்கும் தமிழர்க்கும் அதிக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க.

6. கலைஞர் காலத்தில் அச்சாகி, அதில் அவரைப் பற்றிய இயல்பான பாராட்டுகள் உள்ளன எனும் ஒரே காரணத்திற்காகவே, அவற்றைப் பொறுத்துக் கொள்ளாத, ம. கோ. இரா. காலத்தில் வெளிவராமல் தடுக்கப் பெற்று, அச்சிட்ட இரண்டாயிரம் படிகளையும், அரசின் பாடநூல் நிறுவனத்தில் உள்ள ஓர் அறையில் பூட்டி அரக்கு முத்திரையிடப் பட்டுக் கிடக்கும், வரலாற்றுப் பேராசிரியர் தங்கவேலனாரின் '*தமிழ்நில வரலாறு*' என்னும் அரிய நூலை உடனடியாகத் தடை நீக்கி வெளிப்படுத்தி இவ்வரசு பெருமையும் பயனும் தேடிக் கொள்ள வேண்டும்.

7. இதே போல் கடந்த 13 ஆண்டுகளாகத் தில்லி உச்ச நெறிமன்றத்தால் தொடர்ந்து தடை செய்யப் பெற்றுச் செயலிழந்து கிடக்கும், *தமிழ்-வழிபாட்டு* உரிமையைத் தக்க அறிஞர்களையும் வழக்கறிஞர்களையும் கொண்டு வழக்காடி மீட்டு, மீண்டும் தமிழகக் கோயில்களில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

8. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முத்தமிழ்க் கலைஞர்களின் பிள்ளைகளுக்கென்று அரசவயவர் *முத்தையா* அவர்களின் சலுகையால் கிடைத்த, 18 ஒதுக்கீட்டு இடங்களுக்கு (பொறியியல் (B.E.) படிபபுக்கு—10, உழவியல் (B. Agri) படிப்புக்கு — 5, மருந்துவயியல் (M. B. B. S.) படிப்புக்கு — 2, பல் மருத்துப் படிபபுக்கு — 1) இக் கால் உள்ள பல்கலைக்கழகத்துணைவேந்தர் அவர்கள் பல வகையிலும் பொய் புரட்டல் செய்து,

கடந்த மூன்று ஆண்டுகளாக, அவ் வொதுக்கீட்டு இடங்களைக் குறிப்பிட்ட முத்தமிழ்க்கும் உழைத்த — உழைக்கின்ற கலைஞர்களின் பிள்ளைகளுக்கு (பிள்ளைகள் இல்லாதவர்களானால், அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு)க் கொடுக்காமல், அரசின் கொடையுள்ளத்திற்கு மாறுபட்ட வகையில், வேறு வேறு முறையில் விற்பனை செய்து வருகின்ற நிலையை அரசு கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுத்து முறைசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

## 2. கல்வித்துறைக்குச் செய்ய வேண்டியவை!

1. கல்வித் துறையும் அதில் ஈடுபடும் ஆசிரியர்கள் நிலையும் மிகவும் சீர்கெட்டுக் கிடக்கின்றன. அதுவும் தனியார் கல்வித்துறை நிறுவனங்கள் (பள்ளிகள், கல்லூரிகள்) ஒரு சிலவற்றைத் தவிர பெரும்பாலானவை மிக மிகச் சீர்கேடுகளும் ஊழலும் நிரம்பியனவாக உள்ளதைப் பார்த்து மிகவும் மனம் புழுங்க வேண்டியுள்ளது. தனியார் துறைக் கல்வி நிறுவனங்களை மிகவும் கண்காணிப்புச் செய்து, குற்றம் குறைகள் உடைய நிறுவனங்களாக அவை கண்டு பிடிக்கப் பெற்றால், அவற்றை எவ்வகைக் கண்ணோட்டமின்றியும் உடனே அரசுத் துறை நிறுவனங்களாக மாற்றிவிடத் தயக்கம் காட்டக் கூடாது.

2. மாணவர்களின் கல்வி நிலை, ஆசிரியர்களின் சம்பளம், விடுமுறை, ஓய்வுதியங்கள், வாய்ப்பு வசதிகள் முதலிய அனைத்து நிலைகளிலும் கருத்துச் செலுத்தி,அல்லது தக்க ஆய்வுக் குழுவை வைத்து ஆராய்ந்து, கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே நிலைமைகளைச் சீராக்கி விடல் வேண்டும்.

3. பள்ளி, கல்லூரிகளில் உள்ள பாடப்பொத்தகங்களை அடிக்கடி மாற்றுவதைத் தவிர்த்து விட்டு, குறைந்தது 10 ஆண்டுகளுக்காகிலும் ஒரு நிலையான, தகுதியான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, நல்ல உயரிய கல்வி, பொது வாழ்க்கை, தொழில், அறிவியல் முதலிய கூறுகள் அடங்கிய பாடநூல்களை எழுதுவித்துச் செப்பம் செய்தல் வேண்டும்.

இன்னும் இது போலும் பல வகையான கருத்துகளும் உண்டு. அவை அவ்வப் பொழுது வெளிப்படுத்தப் பெறும்.

## 3. தொழில், தொழிலாளர், உழவுமுறை, உழவர் சீர்திருத்தங்கள்!

1. நம் நாட்டில் பொதுவுடைமை உணர்வுக்கு அதிக வரவேற்பும், கவர்ச்சியும் உள்ளதென்றாலே, தொழில், தொழிலாளர்,உழவு, உழவர்கள் — ஆகிய நிலைகளில், அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்பதும் தலையாய ஒரு காரணமாகும். எனவே அவ்வகைகளில் அரசு மிகப் போதிய கவனம் செலுத்தி, இத்துறைகளில் போதிய வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு நடத்தி, இவற்றில் தேவையான சீர்திருத்தங்களை உடனடியாகத் தீர்வுசெய்து வரையறுத்துக் கொண்டு, ஒரு பாட்டாளியப் பொதுவுடைமை அரசைப் போலச் செயல்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— இன்னும் பல நூறு வகைகளில் கலைஞர் அரசு எண்ணிச் செயல்படுவது வரவேற்கத் தக்கது. பொதுவாக மக்கள் நலனுக்கென யார் என்ன சொன்னாலும் அதில் உடனே கவனம் செலுத்தி, அதை நிறைவேற்ற வாய்ப்பிருப்பின் உடனே நிறைவேற்றிப் பொது மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் துணையையும் கலைஞர் அரசு பெற்றுக் கொள்ளவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம். ஏனெனில் நடுவணரசின் பார்வை தமிழ்நாட்டு அரசின் மீது கழுகுப் பார்வையாகவும், ஒரு பகைப் பார்வையாகவும் இருப்பதாலும், நாமும் நம் நாட்டு மக்களுக்குரிய அடிப்படையான பல்வேறு சிக்கல்களில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதாலும், வேறு யாருடைய துணையை விடப் பொதுமக்களின் துணையுமே இந்நிலைக்கு நம்மை மிகவும் வலிவுள்ளவர்களாகச் செய்ய முடியும்.

மேலும் தேர்தல் நேரத்தில் தி.மு.க. தொழில், உழவு,கூட்டுறவு, கைத்தறி, அரசுப்பணி, பணியாளர் நிலைகள் போன்றவற்றில் பலவாறான உறுதி மொழிகளைத் தம் தேர்தல் அறிக்கையில் வெளிப்படுத்தி உள்ளது. அவ்வுறுதி மொழிகளையெல்லாம் மீண்டும் நினைவு கூர்ந்து, அவற்றில் செய்ய முடிந்தவற்றை உடனடியாகவும், செய்யத் தகுந்த — ஆனால் உடனடியாகச் செய்ய இயலாதவற்றைப் படிப்படியாகவேனும் — கட்டாயம் செய்து முடித்து, இவ்வாட்சி வாய்ப்பை, மேலும் அடுத்த ஆட்சி அமைப்புக்கு ஒரு வெற்றி வாய்ப்பாக மாற்றிக் கொள்ளும்படி, கலைஞரையும் அவரைச் சார்ந்து நிற்கும் அனைத்து அமைச்சர்களையும், பல்லாற்றானும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்வதுடன், அவ்வெற்றி வாய்ப்புக்கு நம் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்! 0

**முன் செய்யத் தவறியவற்றை எண்ணிச் செய்க! முன் செய்த தவறுகளைத் தவிர்க்க!**

(தொடர் 3.) (முன் இதழ்த் தொடர்ச்சி)

# தமிழ்த் தேசத்தின் திரிபாளர்கள் (Revisonists) யார்?

***தமிழ்த் தேசத்தின் திரிபாளர்கள் யார்?***

திரிபாளர்கள் யார் — என்று தெரிந்து கொள்வதற்கு முன்னர்,

திரிபாளர் என்பவர் எத்தகையவர் என்கிற அடிப்படையில், நமக்குத் தெளிவு வருமானால் நம் திரிபாளர்கள் யார் என நாமே எளிதில் விளங்கிக் கொள்ள முடியும்.

திரிபாளர்கள் — என்பார் இன்றைக்குத் திரிபு வாதிகள் (Revisonists) என்று சொல்லப்படுகின்றனர்.

O தாம் மேற் கொண்ட கொள்கை என்பதை இன்றைய குமுகத்தின் விடுதலைக்கான அடிப்படைக் கொள்கையாகவே சொல்லி, நடைமுறையில் அதற்கு எதிர்மாறாக நடப்பவர்.

O தாம் மேற்கொள்ளுகிற அக்கொள்கையைப் பொறுத்த அளவில் மிகச் சிறந்த அடிப்படையான கொள்கை என்று கூறி, அதில் சில திருத்தங்களைத் தெரியாதபடி செய்து, அதன் அடிப்படைத் தன்மையையே மாற்றி நடைமுறைப் படுத்துபவர்.

O தாம் மேற்கொள்கிற கொள்கைக்கான செயற்பாடுகளில் ஏற்படுகிற தாக்கங்களைத் தாம் தாங்க இயலாதவராய் அடிப்படையில், இருந்து கொண்டு, அதை மூடி மறைக்கின்றவராய்ப் பல வகைக் காரணங்களை வெளியே காட்டிக் கொண்டு, கொள்கைச் செயற் பாட்டிற்கான புரட்சியைக் காலங் கடத்துபவர்.

O தாம் மேற்கொள்கிற கொள்கையின் செயற்பாடுகள் உள்ள நாடுகளின் நடைமுறைகளை வெறுமனே, அந்த நாட்டில், அந்த நடைமுறை எந்தச் சூழலில் எதற்காக எடுக்கப்பட்டது என்கிற ஓர் ஆழமான கண்ணோட்டத்தைப் புறந்தள்ளிவிட்டு, அதே நடைமுறையைத் தாம் உள்ள தேசத்தில் அப்படியே பயன்படுத்துவது. அங்ஙனம் பயன்படுத்துவதின் மூலம் தள்ளிப் போகின்ற புரட்சியைப் பற்றி எண்ணவே செய்யாமல், குருட்டுத் தனமாகப் பின்பற்றுவது.

O தாம் மேற்கொள்ளுகிற கொள்கையின் மூல வடிவாளர்களின் கருத்தை அப்படியே குருட்டுத் தனமாக மேற்கொண்டு, அதை இன்றைக்கு நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைப் பற்றி ஆய்வு செய்யாமல் இருப்பது. இதனால் குருட்டுத் தனமான இப்பாடம் தம் தேசப்புரட்சிக்கு எதிராக நின்றால் கூட அதுபற்றிச் சிந்திக்காமல், மேற்படி சிந்திப்பது என்பதே தவறானது என்று கருதுபவர்கள்.

— இந்த வகையில் மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களால் தம் நடைமுறைகளைக் கொண்டுள்ளவர்கள் திரிபாளர்கள் எனப்படுவர்.

இந்நிலையில், தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் இன்றைய தமிழக விடுதலை என்பது ஆணித்தரமாகத் தேவையான ஒன்று என்றும், தமிழ்நாட்டு மக்களின் விடுதலை என்பதே தமிழ் நாட்டு விடுதலையில்தான் உள்ளது என்பதும் நாம் அறிந்ததே.

இத் தெளிவின் கீழ், இன்றைக்குத் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் முழுமையாகப் பார்த்தால் நமக்கு அனைத்துக் கட்சிகளின் முற்போக்கான தன்மைகளும், பிற்போக்கான தன்மைகளும் தெளிவாக விளங்கும்.

இந் நிலையில், முதலில் இந்தியத் துணை வல்லரசு என்பதை எதிர்மையாகக் காண்கின்ற நாம்,

இந்தியத் துணை வல்லரசின் மக்கள் நேயமற்ற போலியான தேர்தலில் பங்கு கொள்ளும் கட்சிகள் — தமிழ்த்தேச, இந்தியாவில் உள்ள பிற தேசங்களின் - விடுதலைக்குப் போராடுகிற அமைப்புகளுக்குத் (துரோகம்) இரண்டகம் இழைக்கக் கூடியவை என்பது தெளிவாகும்.

இன்றையத் துணை வல்லரசின் சுரண்டல் தன்மைகளை ஏற்றுக் கொள்ளுகின்ற, மேலும் இந்த இந்தியத் துணை வல்லரசின் மக்கள் நாயகமற்ற போலியான உரிமைகளை ஏற்றுக் கொள்ளுகிறவர்களே — அதன் தேர்தலை ஏற்றுக் கொள்ள முடியும்.

ஆக, இந்தியாவை ஏற்றுக் கொள்ளாத, அதை எதிர்க்கிற, அதன் அமைப்பையே எதிர்க்கிற தேசிய இன இயக்கங்கள், பிற முற்போக்கு இயக்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் அத் தேர்தல் முறையை ஏற்றுக் கொண்டு இந்தியாவிற்கு— இந்தியத் துணைவல்லரசியத்திற்குத் தாளம் போடுவோர் அனைவரும் எதிரிகள் என்பது தெளிவாகும்.

இந் நிலையில், உதட்டளவில் புரட்சியைப் பற்றிப்பேசிக் கொண்டு, நடைமுறையில் பொதுவான கட்சிகளாகவே, இன்றைய தேர்தலில் ஈடுபடுகிற பொதுவுடைமைக்கட்சிகள் அனைத்தும் முதல் நிலை திரிபாளர்களாவர்.

இரண்டாவதாக, அங்ஙனம் இன்றைய இந்தியத் துணை வல்லரசின் போலியான மக்கள் நாயகமற்ற தேர்தல் நடைமுறையைப் புறக்கணிப்பதோடு இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் புரட்சி செய்யப் பெற வேண்டுமாய்ப் போராடிக் கொண்டிருக்கிற கட்சிகள் நாம் முன்பே குறிப்பிட்டபடி, ஒரு

பகற்கனவையே டிராட்ஸ்கிய சிந்தனையில் கண்டு கொண்டுள்ளன.

அவர்கள், நடை முறை அளவில் இந்தியத் துணை வல்லரசின் மக்கள் நாயகமற்ற தன்மையை எதிர்க்கும் கண்ணோட்டத்தில் நம்மோடு ஒன்றிணைந்து செயல்படுவார்களே தவிர, பிறநிலையில் — தேசிய விடுதலைப் போராட்டமான நம் அடிப்படைப் புரட்சிக்கு ஒரு காலக் கட்டம் வரை எதிராகவே நிற்பர். எனவே அக் காலக்கட்டம் வரை அவர்கள் கொள்கை அளவிலான திரிபாளர்கள் ஆவர்.

இந்தியக் குமுகச் சூழலையும், இங்குள்ள தேசிய இனச் சிக்கலைப் பற்றியும் அறிந்து கொள்ளாமல் புரட்சியைப் பற்றி உலகப் போராட்டங்களை மனப்பாடம் செய்து கொண்டு இறக்குமதி செய்து, கற்பனை கண்டு கொண்டுள்ளனர்.

தேசிய விடுதலைப் புரட்சிகள், போராட்டங்கள் வளர வளரவே — இத் திரிபாளர்கள் தம் நிலையிலிருந்து மாறுபடுவார்கள். அதுவரை அவ்வமைப்புகள் தேசிய விடுதலைப் போராட்டங்களைப் பல வகையில் திரித்துக் கூறிக் கொண்டே இருக்கும். அதற்கெல்லாம் சரியான விடை கொடுக்க வேண்டிய கட்டாயம் விடுதலைப் புரட்சியாளர்களுக்கு உண்டு.

மூன்றாவதாக, மிகப்பெரும் திரிபாளர்களாக நாம் பார்க்கின்றவர்கள் தமிழ் நாட்டில் உள்ளனர்.

1938-இல் தந்தை பெரியார் அவர்கள் தமிழ் நாட்டு விடுதலையை முன்னெடுத்து வைத்ததற்குப் பின்னர், அன்றைய சில சூழல் மாறுதல்களினால்-தாம் முதலில் திராவிடநாடு என்றும், பின் தமிழ் நாடு தமிழருக்கே — என்றும் அறிவித்தார்.

இருப்பினும், அன்றைய சமுகச் சூழலில், இருந்த முரண்பாடுகளைக் கணக்கில் கொண்டு சாதிய முரண்பாடுகளை, தீண்டாமைகளைக் கணக்கில் கொண்டு, இக் குமுகத்தில் சாதிய முரண்பாடே முதன்மை முரண்பாடு என்று அறிவித்தார்.

சாதியத்தை வேரூன்ற வைத்த பார்ப்பனர்களே இன்றைய அரசுக் கட்டிலை அமுக்கிப் பிடித்துக் கொண்டுள்ளனர் — எனவே அவர்களை அவ் வழுத்தப் பிடியிலிருந்து விரட்ட வேண்டுவதே இன்றைய தேவை — என்று கருதினார்.

அவர்களை விரட்டவேண்டுமானால், பார்ப்பனர் அல்லாதார் ஒன்றியணைய வேண்டும் எனும் கண்ணோட்டத்தில், பார்ப்பனரல்லதாரிடம் உள்ள தீண்டாமை, காழ்மை மூடப் பழக்கங்களை உடைக்க இணைபந்தி உணவுமுறை, கலப்புத் திருமணம், கோயில் நுழைவுப் போர் — போன்ற பல வகைப் போராட்டங்களை நடத்திக் காட்டினார்.

பின்னர், மக்கள் சாதியில் மிகுதியாகப் பகுக்கப் பட்டுள்ளனர். 3- விழுக்காட்டுப் பார்ப்பனர் 100-விழுக்காட்டு இடங்களைப் பிடித்துக் கொண்டு உள்ளனர். எனவே சாதி விழுக்காட்டு அடிப்படையில் வேலைவாய்ப்பு, கல்விவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். காலங் காலமாகவே படிக்காமல், அடிமையாய் உள்ள, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குமுகத்தினர் அப்பொழுதே கல்விகற்க இயலும், வேலை வாய்ப்பிற்கு வர முடியும், என்று கருதி வகுப்புப் பிரிவுச் சலுகை முறைக்காகக் கடுமையாகப் போராடினார்.

அதே காலத்தில், மராட்டியத்தில் அம்பேத்கார் அவர்கள் அதைச் சட்டமாக்க நிறையப் போராடிச் சட்ட அளவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவுகிறபடியான சட்டச் சலுகைகள் பல ஏற்படுத்திக் கொடுத்தார்.

'இவ் வகையில் சாதிய அடிப்படையில், இட ஒதுக்கீடு எனும் போராட்டம் பெரியாரின் திராவிடர் கழகத்தைப் பொறுத்த அளவில் மிகப்பெரும் போராட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதுவே அன்றைய பார்ப்பன ஆளுமையைத் தகர்ப்பதற்கான மிகப்பெரும் வாளாகப் பெரியார் கருதினார்.

இந் நிலையில், திராவிடர் கழகத்திலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் — பிரிந்து — இந்தியப் போலித் தேர்தலை ஏற்றுக் கொண்டு, தேர்தலில் ஈடுபடுகிற கட்சியாகச் செயல்பட்டது.

பிரிந்து போன இக்கட்சியில் ஏராளமான இளைஞர்களும், செயலாளர்களும் சென்று விடவே, பெரியார் அவர்களால் தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கான எவ் வகைத் திட்டத்தையோ, செயலையோ செய்ய முடியாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் இட ஒதுக்கீடு போன்ற போராட்டங்களின் வாயிலாகவே தமிழ்நாட்டு விடுதலை என்பதாகக் கருதுவதாக வேறு சொல்லப்படுகிறது.

நிலை இப்படி இருக்க, பிரிந்து போன தி.மு.க. தாம் தேர்தலில் ஈடுபட்டவுடன்,

'அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு' — என்ற முன் நிலையிலிருந்து,

'நாங்கள் தமிழகப் பிரிவினை கேட்பதை விட்டு விட்டோமே தவிர, அதற்கான காரணங்கள் அப்படியே உள்ளன.'

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி'
'இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்'
'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்,
'நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக'
'இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம்'

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தொடர்: 8 இதழ் 115-இன் தொடர்ச்சி.

# தமிழகத்தில் புதிய குடியரசுப் புரட்சி!

4. நில உடைமையாளர்கள் மற்றும், கோவில் மடங்களின் சொத்துகள் நிலங்களைப் பறிமுதல் செய்து, நாயமான முறையில் உழவர்களுக்குக் கொடுப்பது அல்லது சூழ்நிலைக்கேற்ப மக்கள் உடைமையாக்குவது.

5 உழவு தொழிலாளர்களினதும், வறிய உழவர்களின் தலைமையின் கீழான உழவு கூட்டுறவுக் கழகங்களையும், கூட்டுறவு உழவு உருவாக்க நடுவங்களையும் உருவாக்கிக் கொண்டு உழவுத்துறையைச் சீரமைப்பதுடன் நாட்டுப்புற மக்களிடத்தில் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படும். உழவர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் பகுதியினரின் அனைத்துக் கடன்களையும் தவிர்ப்புச் செய்யும்.

6, 8 மணி நேர வேலை நேரம் உறுதிப்பாடு செய்யும். கூலி உயர்வை ஏற்படுத்தும், ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே மாதிரியான கூலி என்ற அடிப்படையில் அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும் ஒழிக்கும். அனைவருக்கும் குமுக உயிர்க்காப்பீடு (இன் சூரன்ஸ்) போன்றவற்றை நடைமுறைப்படுத்தும். 7. வல்லரசுகளின் நில உடைமையாளர்களின் பண்பாடுகளை ஒழித்து புதிய குடிநாயகப் பண்பாட்டை, மக்கள் பண்பாட்டை வளர்த்தெடுக்கும.

8, அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கித் தீட்டக்கூடிய திட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும்.

9. சாதி முறையை ஒழிக்கும் அனைத்து குமுக ஏற்றத் தாழ்வுகளையும், மத அடிப்படையிலான பாகுபாடுகளையும் ஒழிக்கும்.

10. குமுகத்தில் இருக்கக்கூடிய எல்லாப் பெண்களுக்கும் சமநிலையையும் குமுக அரசியல் சிக்கல்களில் முடிவு எடுப்பதற்கான சம உரிமைகள் வழங்கும். 11. இன்றைய கல்வி முறையை ஒழித்துத் தமிழ்த் தேசிய இன மக்களின் தேவையை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையைக் கொண்டு வரும். 12. குழந்தைகளின் உழைப்பைத் தடை செய்து அவர்களின் நலன்களைப் பாதுகாக்கும்.

13. அயல் நாடுகளின் நலன் காக்கப் போடப்பட்டுள்ள அனைத்து வரிகளையும் நீக்கம் செய்து சம முறையிலான வரி முறையை நடைமுறைக்குக் கொண்டு வரும்.

14. எல்லா மட்டங்களிலும் மக்கள் குழு அமைத்து இக்குழுக்கள் மூலமாக மக்களின் புரட்சிகரமான அரசியல் அதிகாரத்தைச் செயலுக்குக் கொண்டு வரும்.

15 இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் மற்ற தன்னுறுதி உரிமை படைத்த பகுதிகளுடன் சமநிலையின் அடிப்படையில் தானகவே ஒன்று படுவதற்கான முயற்சி எடுக்கும்.

16. அனைத்து நாட்டுப் பாட்டாளிப் பிரிவுடனும், உலகில் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளுடன் ஒன்றுபடும்.

அனைத்து இந்தியா அளவில் இருக்கக் கூடிய தொழிலாளிப் பிரிவின் முன்னணிப் படையான சி.பி.ஐ. (எம். எல்)-இன் தலைமையில் வல்லரசு ஆற்றல்களுக்கும், நடுவண் அரசுக்கும் எதிராக இந்தியா துணைக்கண்டத்தில் இருக்கும் பல்வேறு தேசிய இன மக்கள் நடத்தக்கூடிய தேசிய இன விடுதலைப் போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி ஒன்றுபடுவதுடன் பொதுவான நடுவத்துக்கு உட்பட்டு மட்டுந்தான் தமிழகத்தின் விடுதலைப் போராட்டத்தின் கடமைகளை நிறைவேற்ற முடியம். பொது எதிரிகளுக்கு எதிரான பல்வேறு தேசிய இன மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் வாயிலாக உருப்பெற்று வரும் போராட்ட நட்புறவு தன்னுறுதி(சுய நிர்ணய) உரிமை பெற்றுத் தேசியப் பகுதிகளுக்கு நடுவில் வருங்காலத்தில் உருவாகக் கூடிய இயல்பான ஒற்றுமைக்கு அடித்தளமாக இருக்கும். சோவியத்து உருசியாவிலும், சீனாவிலும் மற்ற எல்லா முன் கால நிகரமை நாடுகளிலும் முதலாளியத்தைத் திரும்பவும் கொண்டு வந்ததின் அடிப்படையில் உலகப் பாட்டாளிப் பிரிவு இயக்கம் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. என்றாலும், மார்க்சிய - இலெனினிய, மாவோ சிந்தனையினதும், பேரளவான பாட்டாளிப் பிரிவுக் கலைப்பண்பாட்டுப் புரட்சியின் சரியான படிப்பினைகளின் அடிப்படையில் உலகப் பாட்டாளிப் பிரிவினை இயக்கம் மறுசீரமைப்புக்குட்பட்டுக் கொண்டு இருக்கும். ஒரு நெருக்கடியான கால கட்டத்தில்தான் தமிழகத்தின் தேசிய இன விடுதலைக்கான இந்த அறிக்கை முன் வைக்கப்படுகிறது. பல்வேறு தேசிய இன மக்களின் புதிய குடிநாயகப் புரட்சியின் தொகுப்பு என்ற முறையில் இந்தியாவில் புரட்சியை நிறைவு செய்வது என்று போர்த்தந்திரத்தின், பொதுத் திட்டத்தின் பாகமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய இக்கடமைகளின் நிறைவு இந்தியாவின் மற்ற இன விடுதலைப் போராட்டங்களுக்குப் புது(வீச்சை)த் தெம்பைத் தரும்.

புதுக்குடியமர்த்த நுகத்தடியில் இருந்து தேசிய இன மக்களின் இந்த விடுதலைப் புதிய குடிநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவு செய்வதற்கும் அதையொட்டி நிகரமையை நோக்கியும், பொதுவுடைமை நோக்கிய செலவுக்கும் வழி வகுப்பதுடன் உலகப் புரட்சிக்கான தன் கடமைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். (முற்றும்.)

— தமிழக மறு சீரமைப்புக் குழு (சி. ஆர். சி) சி. பி. ஐ. (எம். எல்), தமிழ்நாடு.

Scanned with CamScanner

# சமயச் சார்பற்ற இந்திய அரசு சமயச்சார்பான விழாக்களுக்கு விடுமுறை அளிக்கலாமா?

அதுவும் இதுவரையில் இல்லாத வேத விழாக்களை உள் நுழைத்தது ஏன் ?

**(அரசின் கட்டுபடுத்தப் பெற்ற (Restricted) மத விழா விடுமுறை !**
**(அரசு ஆணை: எம். எசு-210 நாள் 25-3-88)**

| | | |
|---|---|---|
| 1) | போகி | 13-1-89 |
| 2) | தை பூசம் | 22-1-89 |
| 3) | ஆல் வெண்ட்ஸ் டே | 8-2-89 |
| 4) | மாசி மகம் | 20-2-89 |
| 5) | சிவராத்திரி | 6-3-89 |
| 6) | மௌண்டி தர்ஸ் டே | 23-3-89 |
| 7) | சபாபாரத் | 23-3-89 |
| 8) | சித்திரா பௌர்ணமி | 20-4-89 |
| 9) | ரம்சான் முதல் நாள் | 26-4-89 |
| 10) | ஆடிப்பெருக்கு | 2-8-89 |
| 11) | சிசரா நியூ இயர் | 4-8-89 |
| 12) | வரலட்சுமி விரதம் | 11-8-89 |
| 13) | ரிக் உபகர்மா | 16-8-89 |
| 14) | எசூர் உபகர்மா | 16-8 89 |
| 15) | காயத்திரி செபம் | 17-8-89 |
| 16) | சிரி செயந்தி | 23-8-89 |
| 17) | சாம உபகர்மா | 3-9-89 |
| 18) | தீபாவளி நோன்பு | 29-10-89 |
| 19) | வைகுண்ட ஏகாதசி | — (நாள் இல்லை) |
| 20) | ஆருத்தரா தரிசனம் | — (நாள் இல்லை) |
| 21) | ஆல் சோல்ஸ் டே | 2-11-89 |
| 22) | முகைதீன் ஆண்டவர் உர்சு | 10-11-89 |
| 23) | கார்த்திகை தீபம் | 11-12-89 |
| 24) | எக்ஸ்மஸ் ஈவல் | 24-12-89 |
| 25) | நியூ இயர் ஈவல் | 31-12-89 |

சமயச்சார்பற்ற இந்திய அரசு ஆளுமையில் சமயத் தொடர்பான விடுமுறை ஏன்? இந்த விடுமுறை நாள்களை ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆண்டுக்கு இரண்டு நாள்கள் மதவிடுப்பாக எடுத்துக் கொள்ளலாம். என்ன கொடுமை? யசூர்வேதம் சாமவேதங்கள் விடுமுறை நாள்கள்!

தமிழர்களே உங்களுடைய வாழ்வில் சமற்கிருதமும் சமயமும் வந்து உங்களை முட்டாள்களாக ஆக்க வந்து விட்டது. எச்சரிக்கை!

— *அதியமான்*, தாழையூற்று.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை வந்து போனதற்குப்பின், நான் எழுதும் மூன்றும் மடல் இது... வீடு மயிலைக்கு மாற்றிவிட்ட பின், அச்சகத்திற்கு அப்பா அவர்கள் வந்து போகையில் உணவு, பிற சிக்கல்கள் எல்லாம் இருக்கும். நினைக்கத் தொல்லையாக இருக்கிறது. இருப்பினும் வீடு சிறப்பாக அமைந்திருக்குமாயின் நல்லது ......

நேற்று (16-9-89) மாமா (அருளி) 'தேனு' அறிவன், தெள்ளியன் வந்தனர். காலை 11 மணியளவில் N.S.A. போடப்பெற்றவர் தவிர, பிறரைச் சந்தித்தார். மாலை 4 மணிக்குத்தான் நான் பார்த்தேன்; மற்ற N.S.A. வினர் முகிலையும், இளங்கோவையும் சந்திக்க விடவில்லை. பொருள்களை எக்கச்சக்கமாக வாங்கி வந்து குவித்து விட்டார்; நிறைய அளவில் காசைச் செலவழித்து விட்டார். எங்களுக்கு அதுதான் வருத்தமாக உள்ளது. வெறுமனே உட்கார்ந்து கொண்டு, இருக்கிற எங்களுக்காக எவ்வளவு காசு வீணாகிறது — என்பதே மிகக் கவலையாக உள்ளது. அவ்வகையில்தான் எல்லாருக்கும் தொல்லை கொடுப்பதாய் உணர்கிறோம். அப்பா அவர்கள் வாங்கித் தந்திருந்த பொருள்கள் தீரு முன்பே இப்படி வந்து குவிவது மிக மிக வருத்தமாக உள்ளது; நிற்க.

இங்கு பயனுள்ள வகையில் பொழுதைப் பயன் படுத்துகிறோம். **தென்மொழி, தமிழ்நிலம்** — அணியமாகி இருந்தால் அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி நாங்கள் இங்கு எவ்வகைச் சிக்கலும் இன்றி மகிழ்வுடன் உள்ளோம். 19-ஆம் பக்கல் வழக்குமன்றம் சென்றுவந்தபின் மடல் எழுதுகிறேன். அப்பா அவர்களின் உடல் நலத்தை நன்கு பேணவும்.

நம் புது இல்ல முகவரியைத் தெரியப் படுத்துங்கள். கடைகள் அருகிலேயே இருக்கும் எனக் கருதுகின்றேன். அப்பா அச்சகம் சென்று வருவது தான் மிகத் தொல்லையாக இருக்கும்...

இன்று சென்னையில் நாற்பெரும் விழா நடக்கிறது. செய்திகளைத் தாளில் பார்த்து மகிழ்கிறோம். சிவாசி கணேசன், 'நாங்களும் தனித்தமிழ்நாடு கேட்போம்' எனப் பேசியுள்ளார்... மற்றபடி செய்தி இங்கு ஏதுமில்லை. உங்கள் மடல் வந்தபின் எழுதுகிறேன். அப்பா அவர்களின் மடலுக்குக் காத்து இருக்கிறோம்.

— *பொழிலன்*.

## அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

— *அமைச்சர்*.

— 'ஓடவை' ந. தமிழ்வேந்தன் —

ஓடித்திரிகிற இளைஞர் கூட்டமே
ஒருநொடி நேரம் நில்லுங்கள் — நான்
பாடிவருகிற பாட்டின் பொருளில் — ஏதும்
பயன்கள் உண்டா சொல்லுங்கள்!

நாளும் உழைக்கிற உழவனும் — இங்கே
நலிந்தே வாழ்வல் வீழ்கின்றான்!
வேளைக்கு முழுமை உணவும் பெறும்ல்
வெந்தே நாளும் தாழ்கின்றான்!
கூழுக் காகப் பசியால் ஏங்கியே
குடிசையில் குழந்தை அழுகிறது!
நாளும் மதுவிலே நசிந்து மயங்கியே
நலிந்தொரு கூட்டம் விழுகிறது!
— இதைத்தான் நானும் பாடுகிறேன்;
இதற்கொரு தீர்வைத் தேடுகிறேன்! (ஓடித்)

நாளும் பெண்ணினம் திரையரங் கினிலே!
நாட்டங்கள் போலிமைச் செயல்களிலே!
கோளும் உரைப்பதேன்? விழிப்பதும் என்றோ?
கொள்கை தெளிவதோ அயலினிலே!
வாழும் நெறியிலே வளரும் இளைஞர்கள்
வழியினில் நெகிழ்ந்து பிறழுகிறார்!
தோளும நலிவடைதா தொய்ந்து விழுவதோ?
மதாலைததபிடை இங்கேன் உழலுகிறார்?
— இதைத்தான் நானும் பாடுகிறேன்
இதனுை உள்ளம் வாடுகிறேன! —(ஓடித்)

நிறைவுடன் ஆட்சியர் ஆண்மை யுண்டெனில்
நீக்குக கைப்பண ஊழலைத்தான்!
விரைவுடன் முயலுக; ஏற்றத் தாழ்வினை
வீழ்த்திக் காட்டுக ஆளவைத்தான்!
திரைப்படம் வானொலி இதழ்களும் எல்லாம்
தீமை தீய்க்கவே உழைக்காவா?
உரைக்கருத் தாலே உள்ளம் நலம்பெற
உண்மை உணர்வுகள் செழிக்காவா?
— இதற்கா கத்தான் பாடுகிறேன்
இன்னொரு கேள்வியைப் போடுகிறேன்! (ஓ)

உலகுக் கெல்லாம் உணவைத் தருவதே
உழவுத் தொழிலின் சிறப்பாகும்!
உழுதவன் வீட்டில் பட்டினி கிடந்தால்
உள்ளம் குமுறும்; நெருப்பாகும்!
தொழில்பல செய்தே உடலுழைக்கும் பலர்
தொலலைப் பாட்டுடன் தாழ்வதும் ஏன்?
விழியினில் ஏய்க்கும் வீணர்கள் சிலபேர்
வியப்புறு வளமனை வாழ்வதும் ஏன்?
— இதைத்தான் நானும் பாடுகிறேன்;
இதனைத் தீர்க்கவே நாடுகிறேன்! — (ஓடித்)

ஊன மதத்தினால் உலுத்தர் சாதியால்
ஊரை ஏய்ப்பது; தொலையாதா?
காலம் மாறவே பகுத்தறி வென்னும்
கனலும் நெருப்பு விளையாதா?
உழைக்கப் பலரா, உறிஞ்சச் சிலரா?
உலகம் நாளை விழிக்காதா?
விழிப்புற் றெழுந்தே இளையோர் கூட்டம்
விடியலில் புதுமையை அழைக்காதா?
இதைத்தான் நானும் பாடுகிறேன்
இதற்காகத்தான் பாடுகிறேன்! —(ஓடித்)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 34**

பட்டம், பதவி இவற்றை நாடுபவர், மக்களுக்கு உண்மையான தொண்டராக இருக்கவே முடியாது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 117

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5

TN/MS (C) 657